1973 நவம்பர் 28]

ஆலேகள் அதிகரிக்கப்படுவதினுல் அந்த நிலே ஏற்படுமாஞல், அது பரிசீலிக்கப்படும்.

Village Courts

* 466 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries, with reference to question No. 420 answered on the floor of the Assembly on 19th March 1973, be pleased to state the present stage of the proposal to establish Oor Needhi Mandrams?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஊர் நீதி மன்றங்களே ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் செயற்குறிப்பை அரசு இன்னும் பரிசீலனே செய்துகொண்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், போன வருஷம் இதே கேள்விக்குப் பதில் சொல்லும்போது பரிசீலனேயில் இருக்கிறது என்று சொன்னுர்கள். தாமதப்படுத்திக் கொண்டிருப்பதற்கு இதில் என்ன கஷ்டம் இருக்கிறது ? அட்வகேட்கள் எதிர்ப்பதுதான் அதற்குக் காரணமா ? அல்லது வேறு காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதும் ஒரு காரணம்.

திரு. எம். தேவராசன் : தலேவரவர்களே, ஏற்படுத்தப்போகும் ஊர் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி ஏற்கெனவே இங்கே விளக்கப்பட்டிருக்கிறது. சிவில், கிரிமினல் வழக்குகளில் ' ஆனரரி மாஜிஸ்டிரேட்டு ' களுக்கு இருக்கின்ற அதிகாரங்களோடு பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு இருக்கின்ற சிவில் அதிகாரங் களேயும் இணேத்துக் கொடுக்கலாம் என்பது சட்டத்தின் நோக்கம். உயர் நீதிமன்றம், வழக்கறிஞர்கள் தந்துள்ள கருத்துக்கள் பரிசீலனே செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : கிராமங்களில் சிறிய சிறிய சச்சரவு களுக்கு எல்லாம் கூட நீதி மன்றங்களுக்குச் சென்று அதிகமான பணத்தைச் செலவிடுகிருர்கள். அதைத் தவிர்க்க, இப்படிப்பட்ட

ஊர் நீதிமன்றங்களைத் தொடங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதன் அடிப்படையில்தான் சட்டம் தயாரிக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த ஊர் நீதிமன்றங்களைத் துவக்குவது உயர் நீதிமன்றத்தின் சௌகரியத்திற்காக அல்ல ; ஜனங்களின் சௌகரியத்திற்காகத்தான். ஆகவே, மேலும் தாமதிக்காமல் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மக்களின் வசதிக்காகத்தான் ஊர் நீதிமன்றங்களைத் துவக்க முடிவு செய்தோம். அதுபற்றி உயர் நீதிமன்றத்தின் கருத்தை அரசு பெற்றுள்ளது. கொஞ்சம் காலதாமதம் ஆனாலும் அவர்களுடைய கருத்தை ஆராய்ந்து நடத்தினால் நல்ல முறையில் செயல்படுத்த முடியும் என்று கருதுகிறோம்.

Sales tax on food articles

* 467 Q.—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Revenue be pleased to state :

(*a*) whether it is a fact that the Coimbatore Chamber of Commerce pleaded for the removal of sales tax on food articles about the 18th June 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. (இ) இக்கேள்வி எழுவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, பொதுவாக உணவுப் பண்டங்களின் விற்பனை வரியை ரத்து செய்வதை பொதுமக்கள் விரும்புகிறார்கள். அதனால் கொஞ்சம் விலை குறையும் என்பது அவர்கள் எண்ணம். அதுமட்டுமல்ல. ஒருமுனை வரியை கொண்டுவருகின்ற நேரத்தில் இதைப் பரிசீலித்து, உணவுப் பண்டங்களின் விற்பனை வரியை விலக்க முயற்சி மேற்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.